# 16 இறைவனின் கொடையான சிறுவர்கள்

**மத்தேயு : 17:14-18 லூக்கா : 8:40-42 49-56**

இயேசு சிறுபிள்ளைகளை அதிகமாக அன்பு செய்தார். அவர் தம்மிடம் வந்த பிள்ளைகளை அணைத்துக் கொண்டு அவர்களை ஆசீர்வதித்தார். சிறுவர்களின் பெறுமதியைப் பாராட்டிக் கற்பித்தார். துன்பப்படும் சிறுவர்கள் மீது இரக்கம் காண்பித்தார். இவ்வாறு இயேசு சிறுவர்களை அன்பு செய்து இரக்கம் காட்டி செயற்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களைப் பற்றி இப்பாடத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

**வாசிப்போம்**
**மத்தேயு: 17:14-18**

ஆண்டவரின் பாதத்தண்டை - முழந்தால் படியிட்டு
இரங்கும்படி வேண்டினானே - வலிப்பு நோய் மகனுக்காய்

ஆண்டவரே இரங்கும் - சுகம் தாரும் மகனுக்கு
என வேண்டினான் தந்தை - ஆண்டவரின் பாதத்தண்டை

தண்ணீரிலும் தீயிலும் வீழ்ந்து - துன்புறும் என் மகனின்
துன்பம் நீங்கி சுகம் பெற - இரங்கி உதவும் ஆண்டவரே

சீடர்களிடம் அழைத்து வந்த - என் மகனின் நோயை
குணமாக்க முடியவில்லை - எனக் கூறினர் அவர்கள்.

அழைத்துவா என்னண்டை - எனக் கூறிய ஆண்டவர்.
தீய ஆவியை வெளியேற்றி - ஒப்படைத்தார் மகனைத் தந்தையிடம்.

வெளியேறிச் சென்றது அந்நோய் - சுகம் பெற்றார் அம்மகனும்
இரக்கம் நிறைந்த இயேசு - சுகம் அளித்தார் சிறுவனுக்கு.

இவ்வாறு தாளலயத்தில் குறிப்பிட்ட வலிப்பு நோய் ஏற்பட்ட சிறுவனின் தந்தை மிகவும் மன வேதனையுடன் இருந்தபோது அவர் இயேசுவின் சீடர்களிடம் சென்று சிறுவனைப் பற்றிக் கூறிச் சுகம் பெற விரும்பினாலும் சீடர்களாலும் குணமாக்க முடியவில்லை. தந்தைக்கு எந்த ஆறுதலும் கிடைக்கவில்லை.

பின்பு தன் மகனை இயேசுவிடம் அழைத்து வந்து சுகம் வேண்டி நின்றபோது அவர் தந்தையின் வேண்டுதலுக்குச் செவிசாய்த்து சிறுவன் மீது இரக்கம் கொண்டு அவனைக் குணமாக்கினார்.

## அவதானிப்போம்

- தீய ஆவியின் வல்லமையால் சிறுவன் வலிப்பு நோயினால் துன்புற்றான்.
- முதலாவதாகச் சீடர்களிடம் சுகம் பெற முடியாமல் மீண்டும் இயேசுவிடம் சுகம் பெறுவதற்காகத் தந்தை அழைத்து வந்தார். அதற்குக் காரணம் தந்தை இயேசு விடம் கொண்ட விசுவாசம் ஆகும்.
- சிறுவனிடம் இயேசு காண்பித்த அன்பு, தந்தையின் திடமான விசுவாசம் ஆகியன மூலம் தீய ஆவியை சிறுவனிடம் இருந்து நீக்கி, சுகத்தைப் பெற்றுக் கொடுத்த இயேசு கருணையுள்ளவர் என்பது.
- தீய ஆவிக்கும் கட்டளை இடும் வல்லமை இயேசுவிடம் உள்ளது.
- இயேசுவை அறியாதவர்களுக்கும் அவரைக் கிட்டிச் சேர முடியாத நோயாளி களுக்கும், நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் செய்யும் விண்ணப்பத்திற்கு அவர் செவிசாய்க்கிறார் என்பது.
- உண்மை நம்பிக்கையோடு அநேக புதுமைகளை செய்யமுடியும் என்பதை சீடர்களுக்கு இயேசு கூறியதற்கூடாக உறுதியானது என்பது.

இயேசு இவ்வாறு சிறுவர்களுக்காகச் செயற்பட்ட இன்னுமோர் சந்தர்ப்பத்தைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.

**வாசிப்போம்**

**லூக்கா 8:40-42, 49-56**

யாயிர் என்னும் தலைவர் ஒருவர் - இயேசுவிடம் வந்தார்
இயேசுவின் காலில் வீழ்ந்து - (வேண்டினார் இவ்வாறு)

தன் வீட்டிற்கு வருமாறு - வேண்டினார் பணிவோடு
அவ்வாறு செய்தது தன் மகளை - (துன்பத்திலிருந்து காப்பதற்கு)

சாகும் தறுவாயில் தன் - பன்னிரண்டு வயது மகள்
காப்பாற்றுங்கள் இயேசுவே என - (அவரிடம் வந்தான் விசுவாசத்தில்)

இருப்பினும் நினையாத ஒரு - செய்தி கிடைத்தது அவனுக்கு
மகள் இறந்துவிட்டான் என - (அறிய கிடைத்தது அவனுக்கு)

யாயிரைப் பார்த்து இயேசு - கூறினார் இவ்வாறு
அஞ்சாதீர் நம்பிக்கையோடு இரும் - (அவள் பிழைப்பாள் என்றார்)

அனைவரும் பிள்ளைக்காய் - அழுது புலம்பிக் கொண்டிருக்கக்
கூறினார் இயேசு இவ்வாறு - (அழாதீர்கள் அவள் இறக்கவில்லை என்றார்)

பிள்ளை இறக்கவில்லை - உறங்குகின்றாள் என்றார் இயேசு.
அதைக் கேட்ட அனைவரும் - (கேலியாய் நகைத்தார்கள்)

அவளது கையை பிடித்த இயேசு - சிறுமியே விழித்திடு! என்றார்
உயிர் மூச்சு திரும்பி வர - (மீண்டும் சிறுமி உயிர்பெற்றாள்)

இயேசு தாய் தந்தையை - பார்த்துக் கூறினார் இவ்வாறு
நடந்தது எதையுமே - (சொல்ல வேண்டாம் எவருக்கும்).

*யாயிர் தனது மகளைக் குறித்து இயேசுவிடம் கூறியபோது அவர் அவனுடைய வீட்டிற்குச் சென்றார். பிள்ளையின் பெற்றோரையும் அவரின் சீடர்களையும் அழைத்துக் கொண்டு, பிள்ளை இருந்த இடத்திற்குச் சென்ற இயேசு அவளுக்காக அன்போடு செயற்பட்டு அவள் மீண்டும் வாழ்வதற்காக உரிமையைப் பெற்றுக் கொடுத்தார். மகளுக்காகத் தந்தையின் வேண்டுதல் பலன் கொடுத்தது. சுகம் பெற்ற சிறுமியை அவரின் குடும்பத்தாரிடம் ஒப்படைத்தார். சிறுமியின் உயிரை மீண்டும் பெற்றுக் கொடுத்து அக்குடும்பத்தின் வேதனைகளை நீக்கி சந்தோஷத்தையும் ஆறுதலையும் அளித்தார்.*

### அவதானிப்போம்

- இங்கு நிகழ்ந்தது, மரணத்தறுவாயில் இருந்த தனது ஒரே மகளின் சுகத்திற்காக இயேசுவிடம் தந்தை வேண்டிய விசுவாச விண்ணப்பம்.
- இருப்பினும் அந்த எதிர்பார்ப்பு இல்லாமல் போகும்படியாக இயேசு பிள்ளையிடம் வரும் முன்பே அவள் இறந்துவிட்டாள் என்ற செய்தி கிடைத்தது.
- ''அஞ்ச வேண்டாம், நம்பிக்கையோடு இரு அவள் சுகம் பெறுவாள்.'' என்ற இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கைவைத்த அனைவரும் பிள்ளையின் அருகில் சென்றனர்.

- பிள்ளையின் மீது இயேசு கொண்ட அளவில்லா அன்பினாலும், தந்தையின் விசுவாசத்தாலும் மரித்த பிள்ளையை அவர் மீண்டும் உயிர்ப்பித்துக் கொடுத்தார்.
- எமது அனைத்து எதிர்பார்ப்புகளும் அற்றுப் போகும் சந்தர்ப்பத்திலும் கூட, இயேசுவில் கொள்ளும் நம்பிக்கை மூலம் இயேசு பெரிய புதுமைகளைச் செய்வார் என்பது.

**சிந்திப்போம்**

மேலே பார்த்த இரு நிகழ்விலும் அப்பிள்ளை பெற்ற சுகத்தைப் போன்று மீண்டும் வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்குச் சந்தர்ப்பமாக அமைந்தது பிள்ளையின் தந்தையர்கள் இருவரும் இயேசுவின் மீது கொண்ட அளவில்லா விசுவாசமும் நம்பிக்கையுமாகும். இயேசுவின் மீது கொள்ளும் விசுவாசத்தாலும் நம்பிக்கையாலும் அவர் பிள்ளைகளாகிய நம்மை அன்பு செய்கின்றார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். எமது அனைத்துத் தேவைகளையும் விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் இயேசுவிடம் கொண்டு செல்வோம். சிறுவர்களை அதிகமாக அன்பு செய்யும் ஆண்டவர் எமக்கு ஆறுதல் அளிப்பதற்கு மிகுந்த ஆவலோடு காத்திருக்கின்றார்.

**செயற்பாடு**

1. இயேசு சிறுவர்களுக்கு அன்பு செலுத்தி கூறிய 2 கூற்றுகளைக் குறிப்பிடுக.
2. சிறுவர்களாகிய உங்களிடம் இருக்கும் எதிர்கால எதிர்பார்ப்பு 2 ஐக் குறிப்பிட்டு அதை நிறைவேற்றுவதற்கு எடுக்கக் கூடிய சரியான வழிமுறைகளை எழுதுக.